**MCOP. No.577/2023** **DATE:02.03.2026**

Deposition of Witness : P.W.1

Name : Mr.இளங்கோ

Father/Husband Name : Mr.மாரி

Age :57

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 2nd day of March 2026

---

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 1ம் மனுதாரர். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய தரப்பில் பின்வரும் ஆவணங்களைத் தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| மசாஆ 1 | முதல் தகவல் அறிக்கை |
| மசாஆ 2 | மாதிரி வரைபடம் நகல் |
| மசாஆ 3 | இறப்பு அறிக்கை நகல் |
| மசாஆ 4 | திரு.மாரி அவர்களின் இறப்பு சான்றிதழ் |
| மசாஆ 5 | திரு.மாரி அவர்களின் வாரிசு சான்றிதழ் |
| மசாஆ 6 | திரு.மாரி அவர்களின் பிரேத பரிசோதனை சான்றிதழ் நகல் |
| மசாஆ 7 | திரு.மாரி அவர்களின் ஆதார் நகல் |
| மசாஆ 8 | திரு.மாரி அவர்களின் பென்சன் புத்தகம் நகல் |
| மசாஆ 9 | இளங்கோ அவர்களின் ஆதார் நகல் |
| மசாஆ 10 | இளங்கோ அவர்களின் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| மசாஆ 11 | இளங்கோ அவர்களின் பான் கார்டு நகல் |
| மசாஆ 12 | திரு. சரவணன் ஆதார் கார்டு நகல் |

| | |
|---|---|
| மசாஆ 13 | திரு. சரவணன் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| மசாஆ 14 | திரு.கார்த்திகேயன் ஆதார் நகல் |
| மசாஆ 15 | திரு.கார்த்திகேயன் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| மசாஆ 16 | திரு.கார்த்திகேயன் பான் கார்டு நகல் |
| மசாஆ 17 | திரு.கார்த்திகேயன் ஆதார் கார்டு நகல் |
| மசாஆ 18 | திரு.சந்திரமோகன் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| மசாஆ 19 | திரு.சந்திரமோகன் பான் கார்டு நகல் |

அவை மசாஆ 1 முதல் 19 வரை குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது வயது என்ன என்றால் 79. விபத்தின் போது அவர் என்ன வேலை செய்து கொண்டு இருந்தார் என்றால் விவசாயம் வேலை செய்து வந்தார். அவரின் வருமானத்தை நிருபிக்க ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவருடைய பென்சன் புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேன். இறந்துபோனவரின் வாரிசுதாரர்கள் அவரை சார்ந்து இல்லை என்றால் சரியல்ல. வயோதிகத்தின் காரணமாக அவரால் இருசக்கரவாகனத்தை சரியாக ஓட்டமுடியாமல் அவராகவே இந்த விபத்தை ஏற்ப்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து காலத்தில் 1 ம்எதிர்மனுதாரர் வாகனம் 2 ம் எதிர்மனுதாரர் காப்பிடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 2 ம் எதிர்மனுதாரர்தான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றால் 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் சேர்ந்து தான் நஷ்டஈடு தரவேண்டும்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நீங்கள் தான் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

நீங்கள் இந்த விபத்தை நேரில் நீங்கள் பார்க்கவில்லை என்பதால் உங்களின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை , குற்ற இறுதி அறிக்கை ஆகியவை உங்களுக்கு எதிராக உள்ளதால் தான் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்று அவர்களின் குடும்பத்துடன் தனியே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். உங்கள் தந்தை இறந்தபோது அவரை யார் பார்த்து வந்தது என்றால் நானும் என் தம்பியும் பார்த்து வந்தோம். நீங்கள் உங்கள் தந்தையின் வருமானத்தை சார்ந்து இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் தான் உங்கள் தந்தை இறந்தபோது பார்த்துக்கொண்டு இருந்தீர்கள் என்றால் சரிதான். உங்கள் தாயார் எப்போது இறந்தார் என்றால் 1986ம் ஆண்டு இறந்தார். மசாஆ 8 பென்சன் புத்தகம் 31.01.2023 தேதியில் இருந்து தான் தாக்கல் செய்துஉள்ளீர்கள் அதில் பெறப்பட்ட தொகை மீண்டும் வங்கியிலே திரும்ப்பெறப்பட்டது என்றால் சரிதான். உங்கள் தந்தை இறந்த தேதியில் எவ்வளவு பென்சன் தொகை வாங்கினார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்கள் தந்தையின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தானது உங்கள் தந்தையின் அஜாக்கிரதையால் ஏற்ப்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடுகொடுக்ககடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–</u>** இல்லை.

x

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:02.03.2026

**Sd/– R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.